வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 11.10.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சென்னையில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சென்னையில் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை பணிகள், துறைமுக பணிகள், அமிர்த பாரத் ரயில் திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களின் மேம்பாட்டு பணிகளையும் தொடக்கி வைத்தார்.

நவராத்திரி விழா இன்று தொடங்கியதை முன்னிட்டு குடியரசு துணை தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தேவையின்றி தலையிடுவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**பிரதமர் திரு. நரேந்திர மோடி-1 (19)**

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஒரு நாள் அரசுமுறை பயணமாக இன்று சென்னை வந்துள்ளார். சென்னையில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த திட்டங்களில் சாலை மற்றும் ரயில்வே போக்குவரத்து, துறைமுக உள்கட்டமைப்பு, பெட்ரோலியம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சுமார் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான சென்னை துறைமுகம் மற்றும் வஉசி துறைமுகம், காமராஜர் துறைமுகம் ஆகியவற்றில் முன் முயற்சிகள் மற்றும் அமிர்த பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களின்

மேம்பாட்டு பணிகள் ஆகியவை இதில் அடங்கும். நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் தமிழகத்தில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்கள் தொடங்கப்பட்டிருப்பது ஒரு வரலாற்று சாதனை என குறிப்பிட்டார். இந்த முயற்சிகள் தொழில் மற்றும் வர்த்தகத்தை வலுப்படுத்தும் என்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என்றும் தெரிவித்தார். பிரதமராக பதவியேற்பதற்கு முன்பு கடந்த 2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் குஜராத் முதலமைச்சராக தாம் பதவியேற்ற பிறகு அரசு பொது சேவையில் தாம் 25ஆண்டுகள் நிறைவு செய்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்தியாவின் வளர்ச்சி மற்றும் நவீன உள்கட்டமைப்பை சார்ந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். பாரம்பரியமும் நவீன

பிரதமர் திரு. நரேந்திர மோடி-2 (19)

வளர்ச்சியும் எவ்வாறு கைகோர்த்து செல்லமுடியும் என்பதற்கு தமிழ்நாட்டின் கோவில்கள் மற்றும் அறிவியல் நிறுவனங்கள், மெட்ரோ ரயில் திட்டங்கள் சான்றாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மாநில மக்களுக்கு நவராத்திர விழா வாழ்த்துக்களையும் பிரதமர் தெரிவித்துக் கொண்டார். நிகழ்ச்சியில் சென்னை ஐஐடியில் அமைக்கப்பட்டுள்ள சுதா கோபால கிருஷ்ணன் மூளை ஆராய்ச்சி மையத்தையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். இந்த மையம் 100க்கும் மேற்பட்ட மனித மூளைகளை வரைபடமாக்குவதற்கும், முப்பரிமாண வடிவத்தை உருவாக்குதற்கும் முன்னோடியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மனித மூளையின் தனித்துவமான வரைபடத்தையும் பிரதமர் வெளியிட்டார். முன்னதாக, அவர் சுமார் 4 ஆயிரத்து 900 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்ட பூவிருந்தவல்லி—வடபழனி வழித்தடத்தையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜயுடன் இணைந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து போரூர் புறவழிச்சாலை ரயில் நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை ரயில்நிலையம் வரை பிரதமர் மெட்ரோ ரயிலில் பயணம் மேற்கொண்டார். அவரது இந்த ரயில் பயணத்தின் போது தமிழக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜயும் உடனிருந்தார். இந்த வழித்தடம்

பிரதமர் திரு. நரேந்திர மோடி-3 (14)

இரட்டை அடுக்கு முறையில் கட்டப்பட்டதாகும். அம்ரித் பாரத் ரயில் திட்டத்தின் கீழ் பழனி, வேலூர், அம்பாசமுத்திரம், பரமக்குடி, நாமக்கல் ஆகிய 5 ரயில் நிலையங்களையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து

வைத்தார். தொடர்ந்து போரூர் ஏரி அருகே அமைந்துள்ள ஜலகண்டேஷ்வர் ஆலயத்தில் பிரதமர் சாமி தரிசனம் செய்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், உள்ளிட்டோர் பங்கேற்றனர். கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு பிரதமர் திறந்து வைத்தார். மேலும் தமிழகத்தில் துறைமுகம் சார்ந்த உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுவதாக பிரதமர் தெரிவித்தார். தொடர்ந்து, கல்வித்துறையில் மகத்தான பணிகளை மேற்கொண்டுள்ள ஜெய்கோபால் கரோடியா ஹிந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி பொன்விழா கொண்டாட்டங்களிலும் பிரதமர் பங்கேற்றார்.

## நவராத்திரி வாழ்த்து சி.பி.ஆர். பிரதமர் (15)

நவராத்திரி பண்டிகையையொட்டி குடியரசு துணை தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். துர்கா தேவியின் ஆசிர்வாதம் அனைவருக்கும் வலிமை, தைரியம் மற்றும் நல்ல ஞானத்தை வழங்கும் என்றும் அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அன்னை ஜெகதாம்பா தேவியின் கருணையுடன் வலுவான வளமான மற்றும் வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் உறுதிப் பாட்டை அரசு நிறைவேற்றும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். நவராத்திரி பண்டிகை இன்று தொடங்கியதை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடியும் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடக செய்தியில், கற்பூர நாயகியே என்ற தமிழ் பக்தி பாடலின் வீடியோவையும் பகிர்ந்துள்ளார். தேவியின் ஆசிர்வாதம் மக்களிடையே, பொறுமையையும், தன்னம்பிக்கையும் ஊக்குவிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். அன்னையின் தெய்வீக ஆசிர்வாதம் நாட்டுமக்கள் மீது எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## பிரதமர் தன்தான்யா (03)

பிரதமர் திரு. நரேந்திர மோடி கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதியன்று தன்தான்யா கிரிஷி யோஜனா என்னும் திட்டத்தை விவசாயிகளின் மேம்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு ...

(வாய்ஸ்)

தன் தான்யா - பிரதமர் (14)

(வாய்ஸ்)

நாடு முழுவதும் ஆர்வமுள்ள 100 விவசாய மாவட்டங்களில் விவசாயத்தை வலுப்படுத்த கடந்த ஆண்டு பிரதமரின் தன்தான்யா கிரிஷி யோஜனா திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்டம் சார்ந்த விவசாய தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் மத்திய அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி வைத்தார். இத்திட்டம் 11 அமைச்சகங்கள் மற்றும் துறைகளிலுள்ள 36 மத்திய திட்டங்கள் மற்றும் மாநில திட்டங்கள் மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டு ஓராண்டு காலம் நிறைவடைந்துள்ளது. முதல் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாவட்டங்களும் தங்கள் செயல் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தி வருகின்றன. இந்த மாவட்டங்களில் சராசரி செயல் திறன் 18.85ஆக இருந்தது. இது கடந்த ஆகஸ்ட் மாதம் 46.89ஆக அதிகரித்துள்ளது.

பிரதமர் 25ஆண்டுகள்-1 (07)

பிரதமர் திரு. நரேந்திர மோடி பொது சேவையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். மக்கள் சேவையே தேச சேவை என்ற தாரக மந்திரத்தாலும் தனது அயராத உழைப்பாலும் இந்த பயணத்தை அவர் கடந்து வருகிறார். வருகிற 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய அரசும், அவரது தலைமையில் கடுமையாக உழைத்து வருகிறது. அவரது இந்த தொலைநோக்கு பார்வை எவ்வாறு செயல்பாடாக மாறியுள்ளது என்பதற்கான உதாரணத்தை இன்றைய சிறப்பு செய்தியில் காண்போம்...

(வாய்ஸ்)

பிரதமர் 25ஆண்டுகள் -2 வாய்ஸ் (19)

(வாய்ஸ்)

புதுடெல்லியில் கடந்த செப்டம்பர் மாதம் 17ஆம் தேதியில் செமிகான் இந்தியா என்ற மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி

வைத்தார். உலகளாவிய தயாரிப்பாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். உலகளாவிய மின் சாதன உற்பத்தியில் முக்கிய அடித்தளமாக செமி கண்டக்டர் விளங்குகிறது. இது தற்போது 4.3 மில்லியன் டாலர் மதிப்பைக் கொண்டுள்ளது. இந்திய மின்னணு பொருட்கள் உற்பத்தி 2014-15ஆம் ஆண்டு 1.9 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2025 -26ஆம் ஆண்டு 7 மடங்கு அதிகரித்து 13.11 லட்சம் கோடியை எட்டியுள்ளது. மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 38 ஆயிரம் கோடியிலிருந்து 11 மடங்கு உயர்ந்து 4.24 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. ஸ்மார்ட் போன் உற்பத்தி 33 மடங்கு உயர்ந்து 18 ஆயிரம் கோடியிலிருந்து 6.27 லட்சம் கோடியாகவும், ஏற்றுமதி 165 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் பயன்படுத்தப்படும் கைப்பேசிகளில் 99.2 சதவிகிதம் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது. உலக அளவில் இந்தியா 2ஆவது இடத்தை பிடித்துள்ளது. இத்துறையின்மூலம் தற்போது 25 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மின்னணு பொருட்கள் உற்பத்தியின் அடுத்த கட்டமாக கடந்த 2021ஆம் ஆண்டில் 76ஆயிரம்

பிரதமர் 25ஆண்டுகள்-3 வாய்ஸ் (07)

கோடி நிதி ஒதுக்கீட்டுடன் செமிகான் இந்தியா 1.0 திட்டம் தொடங்கப்பட்டது. அதை தொடர்ந்து 2026ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 1 லட்சத்து 27 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செமிகான் இந்தியா 2.0 திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் செமி கண்டக்டர் உபகரணங்கள், மூலப்பொருட்கள் தயாரிப்பு, ஆராய்ச்சி மேம்பாடு, திறன் மேம்பாடு ஆகிய முக்கிய திட்டங்கள் இதன் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

ஜெயபிரகாஷ் நாராயண் (14)

லோக் நாயக் ஜெயபிரகாஷ் நாராயண் பிறந்த தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தினார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில் பல தலைமுறைகளைக் கடந்து பொது வாழ்க்கையை தேச புதுப்பித்தலுக்கான கருவியாக பார்க்க மக்களை ஊக்குவித்துள்ளது என்றுகூறினார். அவசர நிலையின் போது ஜெயபிரகாஷ் நாராயணின் அச்சமற்ற குரலையும் அவர் நினைவுகூர்ந்தார். ஜெயபிரகாஷ் நாராயண் நல்ல நிர்வாகத்திலும்,

சமூகத்தில் விளிம்பு நிலை மக்களின் நலனிலும் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இருந்தார் என பிரதமர் தெரிவித்தார். வளர்ந்த இந்தியாவை உருவாக்க பாடுபடும் நாம், அவரது கொள்கைகளை நினைவுகூர வேண்டும் என்றும் தெரிவித்தார். சுதந்திர போராட்ட வீரர் லோக் நாயக் ஜெயபிரகாஷ் நாராயண் பிறந்த தினத்தை முன்னிட்டு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

## வெளியுறவு அமைச்சகம் (12)

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தேவையின்றி தலையிடுவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஐ.நா.வுக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையம் உலகின் பல்வேறு பகுதிகளில் நடத்தி வரும் ஆர்ப்பாட்டங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும், மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என கூறியுள்ள தூதரகம் அமைதியான முறையில் ஒன்று கூட அரசியல் சாசனம் அனுமதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது. நீதித்துறையும் ஊடகமும், சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த பிரச்சனைக்கும் தீர்வு காண நீதிமன்றங்கள் எப்போதும் தயாராக உள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சென்னையில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சென்னையில் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை பணிகள், துறைமுக பணிகள், அமிர்த பாரத் ரயில் திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களின் மேம்பாட்டு பணிகளையும் தொடங்கி வைத்தார்.

நவராத்திரி விழா இன்று தொடங்கியதை முன்னிட்டு குடியரசு துணை தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தேவையின்றி தலையிடுவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/CN/VM**